[1st November 1957

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER.

MESSAGE FROM THE GOVERNOR.

Mr. SPEAKER : I have to announce to the House that I have received the following message, dated 31st October 1957, from the Governor of Madras :—

" In pursuance of Clause (3) of Article 207 of the Constitution of India, I, P. V. Rajamannar, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Assembly the consideration of the Madras Registration of Veterinary Practitioners Bill, 1957, as passed by the Madras Legislative Council."

IV.—PRIVILEGE MOTION *RE* INCORRECT PUBLICATION OF PROCEEDINGS OF THE HOUSE IN THE "DINA THANTHI".

Mr. SPEAKER : I have received notice of a Privilege Motion from the hon. Member, Sri K. Sattanatha Karayalar regarding incorrect publication of certain news items in a newspaper. Now I shall call upon Mr. Karayalar to move it.

Sri K. SATTANATHA KARAYALAR : Sir, I rise to move the following Privilege Motion . . .

Sri S. B. ADITYAN : On a point of order, இந்தப் பிரிவிலெஜ் மோஷன்களைக் கொண்டு வருவதற்கு நமக்கு விதிகள் இருக்கின்றன. அதுவும் ஒரு பத்திரிகை மீது பிரிவிலெஜ் மோஷன் கொண்டு வருவதென்றால் அது மிகவும் முக்கியமான விஷயமாகும். நமது அரசியல் சட்டத்தில்கூட குறிப்பிட்ட சுதந்திரங்களை பாதிக்கக்கூடிய காரியம். ஆகையினால், அப்படிப்பட்ட முக்கியமான காரியத்தில் நமது விதிகளையாவது அனுஷ்டிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். முதல் விதி 183-வது விதியின் படி . . .

Mr. SPEAKER : எந்த விதி ?

Sri S. B. ADITYAN : 183-வது விதி, இந்த விதியின் படி : அதாவது—

' When a member has with the consent of the Speaker raised **a matter** of privilege, **the Speaker** shall **read the matter to the House and decide whether a** *prima facie* **case of breach of privilege has been made out or not therein.'**

ஆக், முதலில் சபாநாயகர் அது என்ன விஷயம் என்று சபைக்கு வாசித்து அதற்குப் பிறகு நியாயமான ஒரு பிரச்னை எழுந்திருப்பதாகத் தீர்ப்புச் சொல்லவேண்டும். அப்படிச் சொன்ன பிறகு அதை முதலில் செய்தாக வேண்டும். இரண்டாவது—

' If the Speaker holds that a *prima facie* **case exists, he may allow a motion** to be made by any member that the alleged breach **of privilege be referred to the Committee of Privileges, or in the alternative, that it be dealt with by the House itself.'**

இது ரொம்ப முக்கியமான காரியமென்பதினால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று விதிகளில் குறிப்பிட்டிருக்கிறது. முதலில் ஸ்பீக்கர் வாசிக்கவேண்டும். இரண்டாவது "பிரைம பேஸி" கேஸ்